**கவனிக்க.-** *2021.09.03 ஆந் திகதிய 2244 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II, பகுதி III மற்றும் பகுதி IV(ஆ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2245 - 2021 සැප්තැම්බර් මස 10 වැනි සිකුරාදා - 2021.09.10

*2245 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 1316 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | - |
| ஆய விற்பனையும் குத்தகையும் | 1316 | நானாவித அறிவித்தல்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2021, ஒற்றோபர் மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2021, செத்தெம்பர் மாதம் 17 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


1315 - B 082267 - 5,403 (2021/09)

# ஆய விற்பனையும் குத்தகையும்

*திருத்தம்*

**நாரம்மல பிரதேச செயலாளர் பிரிவில் கள்ளுத் தவறணை குத்தகை விற்பனை - 2022**

*2021.08.06 ஆந் திகதிய வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்கள் ஏற்கப்படும் கடைசித் திகதி 2021, ஒற்றோபர் 07, மு.ப. 10.30 மணி என திருத்தப்படுகின்றது என்பதை நான் உங்களுக்கு தெரிவிக்க விரும்புகிறேன்.*

*டபிள்யூ. பீ. சீ. என். பத்திரன,*
*பிரதேச செயலாளர்,*
*நாரம்மல.*

*பிரதேச செயலகம்,*
*நாரம்மல,*
*2021. 09.07.*

---

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அறிவித்தல்

### ஜே கே புரொபர்டி டெவலொப்மன்ட்ஸ் ( பிரைவேட்) லிமிட்டட்

### பீவீ 130036

### தன்னார்வ ஒடுக்குதல்

*2021, ஓகத்து 26 ஆந் திகதி முறையாக கூட்டப்பட்டு நடைபெற்ற ஜே கே புரொபர்டி டெவலொப்மன்ட்ஸ் ( பிரைவேட்) லிமிட்டட் நிறுவனத்தின் உறுப்பினர்களின் அதிவிசேட பொதுக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் விசேட தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது.*

*விசேட தீர்மானம் பின்வருமாறு நிறைவேற்றப்பட்டது:-*

*(1) 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 319 (1) (ஆ) பிரிவுக்கு ஏற்ப கம்பனி ஒடுக்கப்பட வேண்டும் ; மற்றும்,*

*(2) கம்பனியின் பணிப்பாளர்கள் சபையுடன் உடன்படுகின்ற ஒரு ஊதியத்தை வழங்கி கம்பனியின் அலுவல்களை ஒடுக்கு கின்ற நோக்கத்துக்காக ஒழித்துக்கட்டுநர்களாக இல. 117, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு 02 என்ற முகவரியைச் சேர்ந்த அம்மணி என். டபிள்யூ. தம்பைய்யா, அம்மணி கே. கிருஷ்ணகுமார் மற்றும் அம்மணி என். ஏ. கே. எம். குரே என்பவர்களை இத்தால் நியமிக்கின்றது.*

*ஜோன் கீல்ஸ் கன்சல்டன்ட்ஸ்*
*(பிரைவேட் ) லிமிட்டட்,*
*செயலாளர்கள்.*

*இல. 117,*
*சேர் சித்தம்பலம் ஏ கார்டினர் மாவத்தை,*
*கொழும்பு 02.*

*9-81*

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

*தெஹிவளை, வெண்டவட் பிளேஸ், இல.49 எனும் முகவரியில் வசித்தவரும், தற்பொழுது யுனிட் 1, 17 கெண்ட் ஸ்ட்ரீட், சவுத் பிலிம்ப்டன் 5038, தெற்கு அவுஸ்திரேலியா எனும் முகவரியில் வசிப்பவருமான புதிய தேசியஅடையாள அட்டை இல.198864300450 ஐயும் , பழைய தேசிய அடையாள அட்டை இல. 886430450V க்குரிய பாதிமா சப்னா மிக்தார் ஆகிய நான் கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எப். ஐ. அன்வர் என்பவரால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட இல. 2871 மற்றும் 2019, மாச்சு 02 ஆந் திகதிய விசேட அற்றோணித் தத்துவத்தினால் இல. 49, வெண்டவட் பிளேஸ், தெஹிவளை எனும் முகவரியில் வசிக்கும் தேசிய அடையாள அட்டை இல. 928283771V இற்குரிய பாதிமா சஹ்மா மிக்தார் என்பவருக்கு வழங்கப்பட்ட விசேட அற்றோணித் தத்துவத்தை 2021.08.30 ஆந் திகதியிலிருந்து இரத்துச் செய்வதாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் அறியத்தருகின்றேன். இன்று முதல் எனது அற்றோணித் தத்துவகாரரால் மேற்கொள்ளப்படும் ஏதேனும் நடவடிக்கைக்கு நான் பொறுப்பாளியல்ல என்றும் இத்தால் தெரிவிக்கின்றேன்.*

*பாதிமா சப்னா மிக்தார்.*

*9- 89*

---

## விசேட அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில் பென்னன்கன்னி, காக்கப்பள்ளி, சிலாபத்தைச் சேர்ந்த பாஸ்டியன் கோராலலாகே சமிள அசங்க ரொட்ரிகொ ஆகிய என்னால் புத்தளம்*

மாவட்டத்தில் பிரசித்த நொத்தாரிசு ஆர். ஏ. லலித் ரணசிங்க அத்தாட்சிப்படுத்தியதும் அதே முகவரியைச் சேர்ந்த பாஸ்டியன் கோராலலாகே வீள்மன் ரொட்ரிகொ என்பவருக்கு வழங்கப்பட்டதுமான இல. 7972 ஐக் கொண்ட 2013.07.17 ஆந் திகதிய விசேட அற்றோணித் தத்துவத்தை இத்தினத்திலிருந்து இல்லாதொழித்தும் இரத்துச் செய்தும் வறிதாக்கியும் விடுகின்றேன் என இத்தால் பொது மக்களுக்கும் மேற்படி இலங்கைச் சனநாயக சோசலிக் குடியரசின் அரசாங்கத்திற்கும் அறிவித்துக் கொள்கின்றேன்.

பாஸ்டியன் கோராலலாகே சமிள அசங்க ரொட்ரிகொ.

9-96

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.